BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# 2021 இல் கனடா நாட்டின் மிகச்சிறந்த சமுதாயங்களுக்கான மேக்லீன்'ஸ் (Maclean's )பட்டியலில் ப்ராம்ப்ட்டன் நகரம் 13 ஆம் இடம் வகிக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஏப்ரல் 9, 2021) – நாட்டில் வாழுவதற்கு மிகச்சிறந்த இடங்களுக்கான வரிசையில் ஒன்றாக ப்ராம்ப்ட்டன் நகரம் அங்கீகாரம் பெற்றுள்ளது; இந்த தரவரிசையானது மேக்லீன்'ஸ் (Maclean's) சஞ்சிகையினால் *கனடா நாட்டின் மிகச்சிறந்த சமுதாயங்கள் (Canada's Best Communities) 2021*, என அங்கீகரிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு, ப்ராம்ப்ட்டன் நகரம் இந்தப் பட்டியலில் 199 வது இடத்தைப் பிடித்தது. இப்போது இந்நகரம் இந்த ஆண்டில், 415 நகரங்களில் 13 ஆம் இடத்திற்கு உயர்ந்துவிட்டது. இப்படி தரவரிசை கொடுப்பது, ஒவ்வொரு சமூகத்தின் சிறந்த அம்சங்களையும் எடுத்துக்காட்டுகிறது, இதில், *ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகத்தின் சமூக ஈடுபாடு, வசதிகள்* மற்றும் *இணைய இணைப்பு* ஆகியவை கனடாவில் வசிப்பதற்கும், எட்ட இருந்தே வேலை செய்வதற்கும் சிறந்த இடமாக நகரத்தை வேறுபடுத்திக் காட்டின.

நாட்டில் வாழ சிறந்த இடங்கள் பற்றிய மேக்லீன்'ஸ் பிரத்யேக புதிய தரவரிசையானது COVID-19 தொற்றுநோயையும் கணக்கில் எடுத்துக்கொள்கிறது, இதில் அதிகமானோர் வீட்டிலிருந்து வேலை செய்கிறார்கள், படிக்கிறார்கள். *என்விரோனிக்ஸ் அனாலிட்டிக்ஸ்* மற்றும் *கனடியன் இன்ட்டர்னெட் ரெஜிஸ்ட்ரேஷன் அத்தாரிட்டி* (Environics Analytics and the Canadian Internet Registration Authority (CIRA)) அமைப்பு வழங்கிய தரவுகளையும், பல்வேறு ஆதாரங்களில் இருந்து பொதுவெளியில் கிடைக்கக்கூடிய புள்ளிவிவரங்களையும் பயன்படுத்தி, அவை ஒவ்வொன்றும் சராசரி மனிதனுக்கு எவ்வளவு முக்கியம் என்று அவர்கள் நம்புகிறார்கள் என்பதன் அடிப்படையில், பல தரப்பட்ட வகைகளை எடைபோட்டு அதன்படியே ஒவ்வொரு நகராட்சியையும் தரவரிசைப்படுத்தினர்.

மேக்லீன்'ஸ் தரவரிசைப்படுத்தலுக்காக, வீட்டுவசதி, மக்கள் தொகை வளர்ச்சி, வரிவிதிப்பு, குற்றம், வானிலை, சுகாதாரத்துக்கான அணுகல், வசதிகள் மற்றும் சமூக ஈடுபாடு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டது. CIRA இலிருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில், பிராட்பேண்ட் செயல்திறனையும் மதிப்பீட்டு, புதிய ஒரு வகையாக சேர்த்துக்கொண்டது.

மேலும் தகவல்களுக்கும் முழுப் பட்டியலைப் பார்ப்பதற்கும் வருகை தரவும்: www.macleans.ca

**அறிஞர் கூற்றுக்கள்**

“ப்ராம்ப்ட்டன் ஒரு பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான நகரமாகும், மேலும் கனடாவின் சிறந்த சமூகங்களில் ஒன்றாக மேக்லீன்’ஸ் இனால் அங்கீகரிக்கப்படுவதில் நான் பெருமிதம் கொள்கிறேன், ஆனால் ஒரே ஆண்டில் 199 ஆவது இடத்திலிருந்து 13 இடத்தைப் பிடித்தது இன்னும் பெருமை சேர்க்கிறது. எங்கள் குடியிருப்பாளர்களுக்காக இணைக்கப்பட்ட, நிலைத்து நிற்கவல்ல, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் மேற்கொண்டு பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்காக தன்னை நிலை நிறுத்திக்கொண்ட ஒரு நகரத்தை நாங்கள் தொடர்ந்து பாடுபட்டு உருவாக்கி வருகிறோம். ”

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"கனடாவின் சிறந்த சமூகங்களில் ஒன்றாக மேக்லீன்’ஸ் இனால் அங்கீகரிக்கப்படுவது என்பது, எங்கள் குடியிருப்பாளர்களுக்கு அர்த்தமுள்ள பலன்களை வழங்க எங்கள் குழு செய்து வரும் பணியின் பிரதிபலிப்பேயாகும். எங்கள் சமூகத்திற்கான பலன்களை வழங்க நாங்கள் அர்ப்பணிப்பு கொண்டிருக்கிறோம், மேலும் நகரசபையின் முன்னுரிமை கொண்ட விஷயங்களை முன்கூட்டியே செய்வதன் மூலம், வாழ்வதற்கும், இங்கு வேலை செய்யவும் மற்றும் விளையாடுவதற்கும் விருப்பப்படும் இடமாக ப்ராம்ப்ட்டன் நகரை நாங்கள் தொடர்ந்து மாற்றுவோம். ”

*- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது**. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
**905-874-3426 |** Monika.Duggal@brampton.ca